**நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம்**
**சென்னை – 28**

# சுற்றறிக்கை

**ந.க. எண் 40032/2012/ஆர்1** **நாள்.01.04.2022.**

**பார்வை :**
1. அரசாணை (நிலை) எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை, நாள்.12.11.2007.
2. அரசு கடிதம் எண்.38279 / தேர்தல் / 2006 – 2, நாள்.01.02.2008.
3. அரசாணை எண். 73 மற்றும் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் 26.07.2018.
4. அரசாணை (நிலை) எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.4) துறை, நாள்.19.11.2019.
5. அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.4) துறை, நாள்.30.03.2022.

*****

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

பார்வை–3ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகளின் படி மேற்கொள்ளப்பட்ட சொத்து வரி பொது சீராய்வு, பின்பு பார்வை–4ல் கண்ட அரசாணையின் படி நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழு அமைத்து உத்தரவிடப்பட்டது.

நகராட்சிகளில், அதிகரித்துள்ள நிதி தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் அடைவதற்கான செயலாக்கம் போன்றவற்றை கருத்திற்கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனை வரி சீராய்வு செய்யலாம் என பரிந்துரைக்கப்பட்ட குழுவின் அறிக்கையானது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பார்வை 5–ல் கண்ட அரசாணையில், 2022–2023–ம் ஆண்டு, முதல்

அரையாண்டு (01.04.2022) முதல் கீழ்க்கண்டவாறு மண்டல அடிப்படை மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

**சொத்து வரி :**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Buildings) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Buildings) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைப் பயன்பாட்டு கட்டடங்கள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**காலிமனை வரி :**

தற்போதுள்ள காலிமனை வரி 100 சதவீதம் உயர்வு செய்து சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டடுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

பார்வை 5–ல் கண்டுள்ள அரசாணையில் ஆணையிட்டுள்ளதன்படி சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ளும்போது, கீழ்க்கண்ட வழிகாட்டுதல்கள் கடைபிடிக்க தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

1. **மன்ற தீர்மானம் நிறைவேற்றுதல் :**

பார்வை–5ல் கண்டுள்ள அரசாணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ளபடி குடியிருப்பு கட்டடங்கள், வணிக பயன்பாட்டு கட்டடங்கள், தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடங்கள், சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் மற்றும் காலிமனைகள் ஆகியவற்றிற்கான அடிப்படை மதிப்புகள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும், தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களின் அடிப்படையில் பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Buildings) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு கட்டடங்களுக்கான மண்டல அடிப்படை மதிப்பு கணக்கிடும் முறை**

| | | |
|---|---|---|
| 600 அடி வரை | – | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு X 1.25 |
| 600 அடி முதல் 1200 அடி வரை | – | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு X 1.5 |
| 1201 அடி முதல் 1800 அடி வரை | – | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு X 1.75 |
| 1800 அடிக்கு மேல் | – | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு X 2.00 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Buildings) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்களுக்கான மண்டல அடிப்படை மதிப்பு கணக்கிடும் முறை**

| | | |
|---|---|---|
| தொழிற்சாலை பயன்பாடு கட்டடங்கள் | – | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு X 1.75 |
| வணிக பயன்பாடு கட்டிடங்கள் | – | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு X 2.00 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | – | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு X 1.75 |

**காலிமனைகள் :**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து பொது சீராய்வு செய்யப்பட வேண்டும்.

2. **ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் கோரி விளம்பரப்படுத்துதல் :**

நகர்மன்றத்தால் மண்டலங்களுக்கான அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்பு, பொதுமக்களிடம் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் கோரி அறிவிப்பு வெளியிடும் நாளிலிருந்து 30 நாள்களுக்குள் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஆணையாளருக்கு அளிக்க கோரி, 2 உள்ளூர் தமிழ் நாளிதழ்கள் மற்றும் 1 ஆங்கில நாளிதழின் உள்ளூர் பதிப்பில் அறிவிப்பு வெளியிட வேண்டும்.

3. **பிரதான பட்டியல் தயார் செய்யும் முறை :**

ஒவ்வொரு நகராட்சியிலும் உள்ள ஒவ்வொரு வார்டிலும் அமைந்துள்ள A,B,C மற்றும் D (தற்போது D மண்டலம் நடைமுறையில் உள்ள நகராட்சிகள் மட்டும்) மண்டலங்களில் அமைந்துள்ள குடியிருப்புகளில் 600 சதுர அடிக்கு குறைவான வரி விதிப்புகள், 601 முதல் 1200 சதுர அடி வரையிலான வரி விதிப்புகள், 1201 முதல் 1800 சதுர அடி வரையிலான குடியிருப்புகள், மற்றும் 1800 சதுர அடிக்கு மேற்பட்ட குடியிருப்புகள் என 4 வகைகளாக பிரித்து பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும்.

மேலும், அனைத்து வணிக பயன்பாட்டு கட்டடங்கள், அனைத்து தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடங்கள், அனைத்து கல்வி நிலைய பயன்பாட்டு கட்டடங்கள் மற்றும்

காலிமனைகள் ஆகியவற்றின் விவரங்கள் அடங்கிய பிரதான பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும். இவ்வாறு தயார் செய்யப்பட்ட பிரதான பட்டியல் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

**4. படிவங்கள் அச்சிடுதல் :**

சொத்துக்களின் உரிமையாளர்களிடமிருந்து சொத்து வரி சுய மதிப்பீட்டு படிவம் பெறுவதற்கு குடியிருப்பு கட்டடங்களுக்கு இளம் நீல நிறத்திலும், வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு இளஞ்சிவப்பு நிறத்திலும், தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடங்களுக்கு வெள்ளை நிறத்திலும், சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு இளம் பச்சை நிறத்திலும், காலிமனைகளுக்கு இளம் மஞ்சள் நிறத்திலும் வரி விதிப்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு படிவங்கள் அச்சிட்டு தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

**5. பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் இறுதி செய்து மண்டல அடிப்படை மதிப்பு ஊர்ஜிதம் செய்தல் :**

சொத்து வரி பொது சீராய்வு மற்றும் புதியதாக நிர்ணயம் செய்யப்பட்ட மண்டலங்களுக்கான அடிப்படை மதிப்பு, காலிமனை வரிவிதிப்பிற்கான அடிப்படை மதிப்பு ஆகியவற்றின் மீது பொதுமக்களால் அளிக்கப்பட்ட அனைத்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளின் விவரங்களை பட்டியலிட்டு மன்றத்தின் முடிவிற்கு வைத்து, ஆட்சேபனைகள் இறுதி செய்யும் போது, **01.04.2022** முதல் சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கு, ஏற்கனவே மன்ற தீர்மானம் நிறைவேற்றி நிர்ணயம் செய்யப்பட்ட அடிப்படை மதிப்புகளை ஊர்ஜிதம் செய்து மன்ற தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

**6. மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்தல்:**

**01.04.222** முதல் சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு செய்ய நகரமன்றத்தால் இறுதி செய்யப்பட்ட மண்டல அடிப்படை மதிப்பு விவரங்கள் மற்றும் மொத்த ஆண்டு மதிப்பில் சொத்து வரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) ஆகியவை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய வேண்டும்.

**7. பொது மக்களுக்கு சொத்து வரி சுய மதிப்பீட்டு படிவங்கள் வழங்குதல் :**

வரிவிதிப்புதாரர்களிடம், சொத்து வரி / காலிமனை வரி சுய மதிப்பீட்டு படிவங்கள் பெறுவதற்கு, கட்டடங்களின் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு அனைத்து வரிவிதிப்புதாரர்கள் மற்றும் காலிமனைகளின் உரிமையாளர்கள் ஆகியோருக்கு, நகராட்சி அலுவலர்கள் மூலமாக சொத்து வரி / காலிமனை வரி சுய மதிப்பீட்டு படிவம் வழங்க வேண்டும். மேலும், 5 வகையான சொத்து

வரி / காலிமனை வரி சுய மதிப்பீட்டு படிவங்களை வரிவிதிப்புதாரர்கள் நகல் எடுத்து பூர்த்தி செய்து மின்னஞ்சல் மூலமாக அல்லது நேரடியாக நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் வகையில், நகராட்சி வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரி / காலிமனை வரி சுய மதிப்பீட்டு படிவம், வரிவிதிப்புதாரர்களால் பூர்த்தி செய்யப்பட்டு 30 நாட்களுக்குள் நகராட்சி அலுவலகத்தில் அளிக்கப்பட வேண்டும் என்ற விவரமும், இப்படிவங்கள் வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, நேரடியாகவோ அல்லது நகராட்சி மின்னஞ்சல் வழியாகவோ பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் நகராட்சி அலுவலகத்தில் அளிக்கலாம் என்ற விவரமும், வலைதள மற்றும் மின்னஞ்சல் முகவரிகளும் அனைத்து வரிவிதிப்புதாரர்களுக்கும் தெரிவிக்கும் வகையில் விளம்பரப்படுத்த வேண்டும்.

**8. பூர்த்தி செய்யப்பட்ட சொத்து வரி / காலிமனை வரி சுய மதிப்பீட்டு படிவங்கள் பெறுதல் :**

பூர்த்தி செய்யப்பட்ட சொத்து வரி / காலிமனை வரி சுய மதிப்பீட்டு படிவங்கள் நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**9. பெறப்பட்ட சொத்து வரி / காலிமனை வரி சுய மதிப்பீட்டு படிவங்கள் பிரதான பட்டியலுடன் ஒப்பிட்டு இறுதி பட்டியல் தயார் செய்தல் :**

வரிவிதிப்புதாரர்களிடமிருந்து பெறப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கான சொத்து வரி சுய மதிப்பீட்டு படிவங்கள் ஒவ்வொரு வார்டிலும் அடங்கியுள்ள மண்டலங்கள் வாரியாக 600 சதுர அடிக்கும் குறைவான கட்டடங்கள், 601 முதல் 1200 சதுர அடி வரையிலான கட்டடங்கள், 1201 முதல் 1800 சதுர அடி வரையிலான கட்டடங்கள், 1800 சதுர அடிக்கும் மேற்பட்ட கட்டிடங்கள், வணிக பயன்பாட்டு கட்டடங்கள், தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடங்கள், சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் மற்றும் காலிமனைகள் என பட்டியலிட்டு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அதன்பின்பு கணினிமயமாக்கப்பட்ட பிரதான பட்டியல் மற்றும் வரிவிதிப்புதாரர்கள் அளித்த சொத்து வரி மற்றும் காலிமனை வரி சுய மதிப்பீட்டு படிவங்கள் ஒப்பிட்டு பார்த்து ஒவ்வொரு வரிவிதிப்பிற்குமான வார்டு, மண்டலம் மற்றும் பரப்பளவு ஊர்ஜிதம் செய்து இறுதி பிரதான பட்டியல் தயார் செய்து நகராட்சி ஆணையாளரால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

**10. சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ளுதல் :**

மேலே குறிப்பிட்டுள்ளவாறு, நகராட்சி ஆணையாளரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இறுதி பிரதான பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள கட்டடங்கள், அவற்றின் பரப்பளவு, கட்டடத்தின்

தன்மை, வயது, பயன்பாடு, கட்டடம் அமைந்துள்ள மண்டலம் மற்றும் காலிமனைகளின் பரப்பளவு ஆகியவற்றின் அடிப்படையில், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் மூலமாக வழங்கப்படும் கணினி மென்பொருள் பயன்படுத்தி நகராட்சி பகுதியில் உள்ள எந்தவொரு கட்டடமும் / காலி மனையும் விடுபடாமல் சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு மேற்கொள்ளப்படவேண்டும். இவ்வாறு சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ளும் போது கட்டடத்தின் பராமரிப்பு, வயது மற்றும் கட்டடத்தின் தன்மை ஆகியவற்றிற்கான தள்ளுபடி பார்வை 1–ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை –2ல் கண்ட அரசு கடிதம் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல் படி வழங்கப்பட வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கால அட்டவணையின் அடிப்படையில் சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**ஒம்/–பா.பொன்னையா**
**நகராட்சி நிர்வாக இயக்குநர்**

**பெறுநர்**
**1)**அனைத்து நகராட்சி ஆணையாளர்கள்
**2)** அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்

**இணைப்பு**

1) சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு 2022–க்கான கால அட்டவணை
2) மாதிரி மன்ற கூட்டப் பொருள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

1. 4. 2022
இணை இயக்குநர் (நிர்வாகம்)

01/04/2022

# சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு 2022–க்கான கால அட்டவணை

| | | |
|---|---|---|
| 1 | அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.4) துறை, நாள்.30.03.2022. மன்றத்தின் பார்வைக்கு வைத்து அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்தும், புதிய சாலைகள், தெருக்கள், சந்துகள் ஆகியவற்றை மண்டலங்களில் வகைபடுத்தியும் மன்ற தீர்மானம் நிறைவேற்றுதல். | 11.04.2022. |
| 2 | பொதுமக்களிடம் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் கோரி நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடுதல். | 13.04.2022 |
| 3 | பிரதான பட்டியல் தயார் செய்தல். | 11.04.2022 முதல் 10.05.2022 வரை |
| 4 | படிவங்கள் அச்சிட்டு முடித்தல். | 10.05.2022 |
| 5 | பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் இறுதி செய்து மண்டல அடிப்படை மதிப்பு ஊர்ஜிதம் செய்து மன்ற தீர்மானம் நிறைவேற்றுதல் | 20.05.2022 |
| 6 | மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்தல் | 25.05.2022 |
| 7 | பொது மக்களுக்கு சொத்து வரி / காலிமனை வரி சுய மதிப்பீட்டு படிவங்கள் வழங்குதல் | 21.05.2022 முதல் 10.06.2022 வரை |
| 8. | பூர்த்தி செய்யப்பட்ட சொத்து வரி / காலிமனை வரி சுய மதிப்பீட்டு படிவங்கள் பெறுதல் | 21.05.2022 முதல் 15.06.2022 வரை |
| 9 | பெறப்பட்ட சொத்து வரி / காலிமனை வரி சுய மதிப்பீட்டு படிவங்கள் பிரதான பட்டியலுடன் ஒப்பிட்டு இறுதி பட்டியல் தயார் செய்தல் | 16.06.2022 முதல் 20.06.2022 வரை |
| 10 | சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ளுதல் | 21.06.2022 முதல் 30.06.2022 வரை |
| 11 | சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு முடித்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தல் | 30.06.2022 |

ஒம்/–பா.பொன்னையா
நகராட்சி நிர்வாக இயக்குநர்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

1-4-2022

இணை இயக்குநர் (நிர்வாகம்)

01/04/2022